# அமைதியின் எதிரொலி

"நான் அம்மாவுக்கு ரவிக்கைத் துண்டு பேஷானது வாங்கி வந்திருக்கிறேன்!" என்றான் ரகு.

"போயும் போயும் ரவிக்கைத் துண்டு வாங்கிண்டு வந்ததுக்குத்தானா இப்படிப் பிரமாதப்படுத்துகிறாய்? புடவை வாங்கிக்கொண்டு வந்திருக்கக்கூடாது?" என்றாள் ஜானா. அண்ணனைக் கிண்டல் செய்துவிட்டு, மன்னியையும் வேடிக்கையாக ஒரு பார்வை பார்த்தாள்.

மன்னி ராஜி ஒரு புன்னகை செய்தாள் பதிலுக்கு, நாத்தியின் பேச்சுத் தனக்குக் குற்றமாகப்படவில்லை என்று கூறும் பாவனையிலே. ரகு வாய்விட்டே சிரித்தான்.

"இந்தா ரகு!" என்று சொல்லிக் கொண்டே, வெண்கல டம்ளர் காப்பியை பிள்ளையின் எதிரில் வைத்தாள் காவேரியம்மாள். "இந்த மட்டும் அம்மா நினைப்பு இருக்கிற பிள்ளை யாரு!" என்று வாயால் சொல்லாவிட்டாலும், காவேரியம்மாளின் முதிய முகத்திலே அத்தகைய பெருமை துலங்கியதை, பக்கத்திலே நின்று கொண்டிருந்த ராஜி கவனித்து ஆறுதலடைந்தாள்.

'காப்பிக்கடை'யானதும் ஜானா புத்தகமும் மேஜையுமாகக் கூடத்திலே லயித்துவிட்டாள். ரகு பத்திரிகையும் கையுமாக வாசலுக்குப் போனவன், உரையாட வந்த ஓரிரு நண்பர்களுடன் ஈடுபட்டுவிட்டான். சமையற்கட்டுப் பக்கம் மாமியாருடன் காரியப் பொறுப்பிலே முனைந்தாள் ராஜி. அவள் கை காரியம் செய்தது; உடல் நாலு புறமும் சுழன்றது - ஆனால் மனமோ - அவளுடைய டிரங்குப் பெட்டியை வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

அந்தப் பெட்டியிலே ஒரு பட்டுப் புடவையிருந்தது - புத்தம் புதிது, ஒன்பது கஜம், கணவன் ரகுவின் பணங்கொண்டு வாங்கப்பட்டது அது. அவள் அதை உடுத்தும் உரிமை பெற்றுத்தான் இருந்தாள், கணவனின் அனுமதிமூலம்! .....ஆனால்.....

காலையில் நடந்த அந்தப் பேச்சுக்கப்புறம் அவளுக்கு அந்தப் புடவையைத் தன்னதாகப் பாவிக்க தைரியம் வரவில்லை. காப்பி மணம் பரவிய சமயத்திலே நடந்த அந்தச் சிறு சம்பாஷணை, காப்பியின் குணத்தைப் பெற்றுவிட்டது. சம்பாஷணையின் வேடிக்கை எல்லோர் மனதிலும் ஒருவகைத் தென்பை பரப்பினாலும் நாட்டுப் பெண்ணான அவள் மனதிலே ஒரு சங்கடம் ஏற்பட்டுவிட்டது.

காப்பியின் பித்த குணம் போகுமா? ரகு அந்தப் பேச்சை எடுத்துக்கொண்ட மாதிரி, நாட்டுப்பெண் ராஜி உதறித் தள்ளிவிடமுடியுமா?

"அம்மாவுக்கு ரவிக்கையோடு அந்தப் புடவையையும் கொடுக்கலாம்!" என்று கணவனிடம் சொல்லிவிட வேண்டுமென்று அவள் நா துடிதுடித்தது - சொல்லியேயிருப்பாள், சமயம் சரியாக இல்லை. புக்ககத்தில் கணவனுடன் ஐந்து நிமிஷம் தனிமையில் பேசிப்பழக்கமற்ற அவளுக்கு, சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொள்ளத் தெரியாது.

அந்த எண்ணத்தின் ஆவேசத்திற்குத் தடை ஏற்பட்டுவிட்டதால் மெள்ள ஆலோசனை படர்ந்தது. மனதிலே நாவின் துடிதுடிப்பு அடங்க அடங்க மனதின் துடிப்பு அதிகமாகியது.

புடவையைத் தன் மாமியாருக்குக் கொடுத்துவிட்டால்தான் தனக்கு நிம்மதி ஏற்படுமென்று தோன்றியது அவளுக்கு. தான் பெட்டியில் அந்தப் புடவையை வைத்துக்கொண்டு, மாமியாருக்கு ரவிக்கைத் துண்டையும், நாத்தனாருக்கு நூற்புடவையையும் எடுத்துக்கொடுப்பது கொஞ்சமும் பாந்தமில்லை என்று பட்டது ராஜிக்கு. ஆனால் அந்த எண்ணங்களைச் சிறிதும் மாறாமல் வைத்திருக்க சக்தி தரவில்லை, பாழும் ஆசை. கணவன்

பணத்தில் முதன் முதலாக அவளுக்குக் கிடைத்த புடவை அது! அவ்வளவு சீக்கிரம் அதை தியாகம் செய்துவிட ஒப்புமா பெண்மனம்?

அவள் எண்ணினதுபோல அந்த அனாவசியக் குழப்பம் ஏற்பட்டது, 'போதாத வேளையால் தான்!

ரகுவும் ராஜியும் முதல் நாள் இரவுதான் அங்கே வந்திருந்தார்கள் மூன்று வார லீவிலே. அந்தப் பட்டுப்புடவையை வாங்கி இன்னும் பதினைந்து நாள் ஆகிறது. ஒரு வெள்ளிக்கிழமை அதை உடுத்த வேண்டுமென்று எண்ணினாள் ராஜி; ஒரு வெள்ளி , இரண்டு வெள்ளி போயிற்று. மூன்றாவது வெள்ளியன்று உடுத்த எண்ணியிருந்தாள், அதற்குள், புதன் கிழமை காலை. லீவு சமாசாரம் தெரிந்துவிட்டது. வியாழன் காலை புறப்பட்டுவிட்டார்கள் ஊருக்கு. இன்று வெள்ளிக்கிழமை!

இன்னும் இரண்டு நாள் பொறுத்து லீவு கிடைத்திருந்தால், இன்று - இந்த வெள்ளிக்கு - அங்கேயே இருந்திருப்பாள்; புடவையை அங்கேயே உடுத்தியிருப்பாள்; ஒரு சங்கடமும் இருந்திருக்காது. ஒரு தரம் உடுத்தினாலென்ன, பத்து தடவை உடுத்தினாலென்ன! பிரித்து உடுத்திய பின்பு, புடவை புழங்கின புடவைதானே! இப்போது அது மடிப்புப் பிரியாமல் இருப்பதால்தானே இந்தத் தொல்லை, குழப்பம், யோசனை!

உண்மையை ஆராயப்போனால், ராஜியின் மனக்குழப்பத்திற்குக் காரணம், மடிப்புப் பிரியாமல் புடவை இருந்ததால் மட்டுமல்ல. புடவையை வாங்கும்போதே ஏற்பட்டது ஒருவித தடுமாற்றம். அந்தத் தடுமாற்றத்தின் நினைப்பு, விளைவுதான் இந்த மனத் தடுமாற்றத்திற்குக் காரணம்.

ரகுவின் நண்பன் சுப்பு தன் மனைவிக்கென்று வாங்கிவிட்ட நான்கு பட்டுப்புடவைகளை, ரகுவின் எதிரே எடுத்துப் போட்டான். "இதிலே நீ உன் 'மிஸ்ஸஸ்'க்கு ஒன்று எடுத்துக்கொள்ளப்பா. இவளுக்கு மூன்று போதும் என்று பார்க்கிறேன்!" என்றான் சுப்பு, ரகுவிடம். சுப்புவின் 'மிஸஸ்' சியாமளாவும், ராஜியும் சற்று ஒதுக்கினால்போல உட்கார்ந்துதானிருந்தார்கள். சியாமளா முத்துத் தோடும், வளையலும் வாங்கிக்கொள்ள எண்ணி, ஒரு புடவையைக் கொடுத்துவிடலாம் என்று நிச்சயம் செய்திருந்தாள்; அவள் ஏன் கணவனின் பேச்சை ரசிக்கமாட்டாள்?

சுப்புவின் வேண்டுகோளைக் கேட்டதும் ரகு ராஜியின் முகத்தைப் பார்த்தான். புடவை எடுக்க அவளுக்கு ஆசைதான் என்று அவள் முகம் சொல்லிற்று, ஆனால் பேச்சு வேறுவிதமாக இருந்தது. "எதற்கு? வேண்டாம்? அனாவசியம்! பண்டிகையா, பருவமா?" என்றாள் ராஜி.

"ஏண்டி, பண்டிகைக்கு மட்டும் வாங்கிவிடுகிறாயோ! தீபாவளிக்கு அசடுமாதிரி நூல் புடவை வாங்கிக்கொண்டாயே!..... இப்போ இதை எடுத்துக்கோயேன்!" என்று ராஜியின் 'காதைக் கடித்து' தைரியமூட்டினாள் சியாமளா.

"வேண்டாம். சியாமளா! இப்போ அனாவசியமென்று எனக்கே தோன்றுகிறபோது..." என்றாள் தயக்கத்துடன் ராஜி.

"அவருக்குத் தோன்றுமாக்கும்!... அவர் அப்படி நினைக்கறதாகத் தெரியல்லை! - நீதான் கற்பனை செய்யறே!... 'வாங்குகிறேன்,' என்று அவர் சொன்னால் வாங்கட்டுமே!" என்றாள் சியாமளா.

ஒன்றும் நிச்சயம் ஆகவில்லை அன்று. ரகுவும், ராஜியும் சுப்புவின் வீட்டை விட்டு வரும்போது வேறேதேதோ பேசினார்கள், புடவையைப் பற்றி, பேசவில்லை.

மறுநாள் காலை ரகு சுப்புவின் வீட்டை நோக்கி விரைந்தான். புறப்படும்பொழுது அவன் எங்கே போகிறான் என்று அவளுக்குத் தெரியாது; அவனும் சொல்லவில்லை. வீடு திரும்பும்பொழுது புடவையுடன் வந்தான் ரகு. அதைப்பார்த்து ஆச்சர்யமும், சந்தோஷமும் அவள் அடைந்தாலும் ஒரு தயக்கத்துடன், "எதற்கு வாங்கிண்டு வந்துட்டேள்!" என்றாள்.

"நீ வேண்டாமென்று சொல்லிவிட்டாய், ஆனால் புடவையை வாங்காமலிருந்தால் சுப்புவுக்குக் கொஞ்சம் சிரமம். பாவம்! அம்மாவுக்கு இருந்துவிட்டுப் போகட்டுமே என்று எடுத்தேன் புடவையை!" என்றான் ரகு. புடவையைப் பொட்டலத்திலிருந்து எடுத்துக்கொண்டே. ராஜிக்கு நெஞ்சையென்னமோ செய்தது. "புடவை நன்றாகத்தானிருக்கிறது, பட்டும் நன்றாகவேயிருக்கும்! சியாமளா எடுத்தால் சோடை போகாது!" என்று சொல்லிச் சமாளித்தாள், ரகு பட்டை தரம் பார்த்துக் கொண்டிருக்கையில்.

அவள் தொண்டையில் தடுமாற்றத்தைக் கண்டு கொண்டுதானோ என்னமோ, ரகு அவளை நிமிர்ந்து பார்க்கவில்லை. புடவை மீதே கண்ணை நாட்டிவிட்டான்.

ராஜி மட்டும் புடவையைக் கையில் எடுத்துப் பார்க்கத் துணியவில்லை. உள்ளே போய்விட்டாள்.

ரகு குளிக்கச் சென்றதும் ஆவலால் தூண்டப்பட்டு, அதை எடுத்துப் பார்த்துக்கொண்டிருந்தாள். சொல்லி வைத்தாற்போல ரகு வந்துவிட்டான். சோப்புப்பெட்டியில் சோப்புத் தீர்ந்து போனதால், புது சோப்பெடுக்க அவன் திரும்பி வருவான் என்று அவளா கண்டாள்?

"என்ன புடவைச் சோதனை!" என்றான் ரகு.

அவன் வந்ததுமே, கையும் களவுமாகப் பிடிபட்ட குற்றவாளியைப்போல துணுக்குற்ற அவளுக்கு, அவன் எகத்தாளமும் குறும்புமாக அந்தக் கேள்வி கேட்டதும், மீறின வெட்கத்தால் துணிச்சல் பிறந்தது.

'ஏன் பார்க்கக்கூடாதா? நானே தான் எடுத்துக் கொண்டால் என்ன என்று யோசனை எழுந்தது. புடவையைப் பார்க்க வந்தேன்!" என்றாள். அவனை நேருக்குநேர் பார்க்க மட்டும் வெட்கம்.

"நல்ல பொண்ணுடிம்மா!" என்று அவன் சொல்லிக்கொண்டு வெந்நீரறையை நோக்கிச் சென்றபோது, அந்தப் புடவை தன்னதேயாகும் என்று தெரிந்து கொண்டுவிட்டாள் ராஜி.

மத்தியானம் சாப்பாடான பின்பு அதை உறுதி செய்து கொள்ள விரும்பி ராஜி பேச்சைத் துவக்கினாள்.

"ரேடியோ வாங்கப் பணம் சேரணும்னு சொல்லிக்கொண்டு இருந்தீர்களே, புடவைக்கு ஆசைப்பட நியாயமில்லை என்று இருந்தேன் நான். எப்படியும் புடவை எடுக்கிறது நிச்சயம் என்றதும் எனக்கே எடுத்துக் கொள்ளலாமா என்று தோன்றுகிறது! ஆனால் அம்மாவுக்குத்தான் இருக்கட்டுமே - நீங்கள் முதலில் நினைச்சதுபோல - என்றதும் தோன்றுகிறது! அம்மாவுக்கென்று சொல்லிக்கொண்டு நீங்கள் புடவையை எடுத்தீர்கள், நான் எனக்கு வேண்டாமென்றேன் முதலில். இப்போது நான் எடுத்துக்கொண்டால், நீங்களே என்ன நினைப்பீர்கள்?.... " என்றாள் ராஜி.

"எதற்கு அந்த அனாவசியப் பேச்சு? சின்ன விஷயத்தைப் பிரமாதம் என்று நினைக்கிறாய். அம்மாவுக்குத்தான் என்று நான் வாங்கியிருந்தால் அதை நான் மாற்றமாட்டேன், தெரியுமோல்லியோ! உனக்காவது, அம்மாவுக்காவது ஆகட்டும் என்று வாங்கினேன், அதனாலே நீ எடுத்துக்கொள்வதானால் பேஷாக எடுத்துக்கொள்!" என்றான் ரகு.

"அப்படியானால் சரி! அதை நான் எடுத்துக்கொள்கிறேன். இன்றைக்கு.... என்ன?... நாளைக்கே வெள்ளிக்கிழமை! உடுத்திவிடுகிறேன்." என்று சொல்லி சந்தோஷப்பட்டாள் ராஜி. ஆனால் அந்த வெள்ளிக்கிழமையோ அதற்கடுத்த வெள்ளியிலோ அதை உடுத்த முடியவில்லை இந்த மூன்றாம் வெள்ளியும் வந்தாச்சு!

'தாய்க்கு அடுத்தபடி தாரம்!' என்ற கொள்கையுடைய ரகு அப்படியே நடப்பவன்; அதை உணர்ந்தவள் ராஜி. தன் கணவன் முதல் சம்பளப்பணம் இருநூற்றைம்பது ரூபாய் அன்னைக்கு அளித்ததை அறிந்திருந்தாள் அவள். தங்கை தம்பியருக்கும் அவன் ஆசைப்பண்டங்கள் வாங்கித் தந்துவிட்டான். அப்புறம்தான் தனக்கு இந்தப் புடவை கிடைத்திருக்கிறது! அதனால், தான் அந்தப் புடவையை ஏற்பது சிறிதும் குற்றமில்லாத

செய்கை என்ற துணிவும் நம்பிக்கையும் அவளுக்கு இருந்தது அப்போது; ஊருக்குப் புறப்பட்டு, வந்து சேர்ந்த பின்னும் இருந்தது! ஆனால் இதோ, காலையில் அந்தச் சிறு சம்பாஷணைக்கு அப்புறம் தான் நம்பிக்கை தளர்ந்தது.

'ஏன் சோதனைபோல இப்படி நடக்கவேண்டும்? அவருடைய தாய்தான் புடவையைப் பெற வேண்டும் என்பது கடவுளின் எண்ணம்போலும்! இல்லாவிட்டால் நான் அதை உடுத்தாமல் இழுபட்டுச் செல்வானேன்? லீவு 'திடுதிப்'பென்று கிடைப்பானேன்? அம்மாவுக்குப் பணமாக அவர் பரிசளித்தது சரியன்று. புடவை ஒன்றும் வாங்கியிருக்கணும்! அவர் அப்படிச் செய்யாததால், இந்தப் புடவை எனக்கு உரிமையில்லை, அம்மாவுக்கே உரிமை!' இப்படி எண்ணியது அவள் உள்ளம். 'அவளுக்குத்தான்!' என்று அவன் வாங்காத அந்தப் புடவையை, அவள் 'தனக்குத்தான்!' என்று உரிமை கொண்டாட இஷ்டப்படவில்லை. 'நேற்று' வந்த தனக்கு. அவருடைய 'பெற்ற தாயை' விட என்ன சலுகை! இப்படித்தான் எண்ணினாள் அவள்.

ஆனால் புடவையின் தோற்றம் ஆசைக் கனலைக் கிண்டியது. புடவை கொஞ்சம் நரசுக்குக் கலரில், சற்று பேஷனாகத்தான் இருந்தது. சியாமளா எடுத்தது அது; கர்நாடகமாயிருக்குமா? வயதில் பெரியவரான மாமியாருக்கு ஒருக்கால் அது பாந்தமாகவும் இராது. தீபாவளிக்கு பட்டுப்புடவை வாங்கிக்கொள்ளாததால், இப்போது அதைத்தான் வாங்கிக் கொண்டதில் தவறென்ன இருக்கக்கூடும்? . . . "ரவிக்கைத் துண்டு வாங்கி வந்திருக்கிறேன்!" என்று சொன்ன ரகு, புடவையைப் பற்றிச் சொல்லாதிருக்கையில், இந்த நாசூக்கு'ப் புடவையுடன் ரவிக்கைத் துண்டை வைத்துக்கொடுக்கப்போனால், அதிலேயே சந்தேகம் தோன்றவும் தோன்றலாமே! தன்மேல் ஒரு குற்றமும் இல்லையென்றால் புடவையை கம்பீரமாக தான் எடுத்து உடுத்துவதில் தவறென்ன.....?

ஆனால் அந்தப் பாழும் நினைப்பு வந்து தடுத்தது! "எனக்கு என்று அவர் வாங்கின புடவையல்ல இது! புடவை ஒன்பது கஜமாயிருப்பதால் அம்மாவுக்கு வாங்கினதுதான் என்றால், அதிலே சந்தேகம் தோன்றாது! அம்மாவுக்குப் 'பேஷனாக' பிள்ளை புடவை எடுத்திருக்கிறார் என்று சொல்லிவிட்டால் போகிறது!" என்று நினைத்துக்கொண்டாள் ராஜி. மாமியாருக்கு வாங்கினதென்றே சொல்லிச் சமாளித்துவிட எண்ணினாள்.

ஆனால் கடைசியில் இந்த 'தகிடுதத்த'ப் போக்கும் அவளுக்குப் பிடிக்கவில்லை. "ஏன் உண்மைக்குப் பயப்படவேண்டும்?" என்றது அந்தரங்கம்.

'இங்கேயிருக்கும் மூன்று வாரங்களையும் நிம்மதியாகக் கடத்த முடியாது, புடவையைப் பற்றி மறைத்தால். குட்டாக புடவையை எடுக்காமல் ஊருக்குப்போய் உடுத்துவது நினைக்க முடியாத காரியம். அங்கே நிம்மதி வந்துவிடுமா? ஒளிவு மறைவே கெடுதல்!' என்று உறுதி பிறந்தது ராஜிக்கு.

'இதை வாங்க நேர்ந்த விதத்தைச் சொல்லிவிடுகிறேன்! அடுத்த வெள்ளி புடவையை உடுத்தலாம். இன்றே வேண்டாம்! அதற்குள் மாமியாருக்கு உண்மை சொல்லிவிடலாம்!' என்று முடிவு செய்தாள், கள்ளங்கபடமற்ற ராஜி.

இரண்டு மூன்று நாட்கள் கடந்தன. அவளும் புடவையைப் பற்றிப் பேச்செடுக்கவில்லை. ரகுவும் பேச்செடுக்கவில்லை.

'அவருக்கு தங்கை சொன்னதோ, என் பெட்டியில் பிரிக்காத புடவையிருப்பதோ ஞாபகமே காணோம்!' என்று எண்ணிக்கொண்டாள் ராஜம். 'பெண் ஜன்மம், எல்லாவற்றுக்கும் கவலைப்படுகிற ஜன்மம்!' என்று சொல்லிக்கொண்டாள் தனக்குள்ளே.

நான்காம் நாள் மாலை சுவாமி விளக்குத் திரி திரித்துக்கொண்டிருந்தார்கள் மாமியாரும், நாட்டுப் பெண்ணும். அந்த சமயத்தில் உண்மையான விஷயத்தை, திரிக்காமல் கூற முற்பட்டாள் ராஜி; அவளுக்கே வேடிக்கையாகத்தான் இருந்தது.

"அம்மா! ஒரு விஷயம் சொல்லணும்னு இரண்டு நாளாய் நானும் பார்க்கிறேன். ஆனால்....." என்று தயங்கினாள் ராஜி.

பேரனோ, பேத்தியோ பிறக்கப்போகிறார்கள் என்ற எண்ணம் போலும் காவேரியம்மாளுக்கு!

"என்ன அப்படிப்பட்ட விஷயம்?.... நானும் நினைச்சேன், உன் முகம் வெளுத்திருக்காப்பலே.... .

"அதெல்லாம் இல்லையம்மா," என்று சொல்லிச் சிரித்தாள் ராஜி. அந்தச் சிரிப்பு சிரித்ததுமே தென்பு வந்துவிட்டது. "அவர் ஒரு பட்டுப் புடவை வாங்கியிருக்காரம்மா!... எனக்கு வெட்கமாயிருக்கு.... அதை...." என்று தடுமாறினாள் ராஜி.

"அப்படியா?.... புடவை வாங்கியிருக்கானா?.... இதுக்கு வெட்கமென்ன, நன்னாருக்கு போ! அப்படிச் சந்தோஷமா வாங்கித் தந்திருக்கானேன்னு எனக்கும் சந்தோஷம்தான்! ஒரு வருஷமாய், முன்னூறு முன்னூறாய் சம்பாதிக்கிறான்! ஒரு புடவை உனக்கு வாங்கினதுலே தப்பு என்ன! சந்தோஷப்பட வேண்டிய விஷயம்னா?" என்றாள் காவேரியம்மாள்!

"உங்களிடம் சொன்னதும்தான் எனக்கு நிம்மதி ஏற்பட்டது அம்மா! என்னமோ சங்கோஜமாயிருந்தது அதை உடுத்த. நீங்க சொன்னப்புறம்தான் எனக்குத் தயக்கம் போச்சு!" என்றாள் ராஜி உள்ளப் பூரிப்புடன். ஒரு துள்ளலுடன், சுவாமி பீடத்திற்கு சென்று தீபம் ஏற்றினாள். "என்ன இருந்தாலும் அம்மா தெய்வாம்சம்!" என்று சொல்லிக்கொண்டு அஞ்சலி செய்தாள்.

இரண்டு நாள் சென்றது. வெள்ளிக்கிழமை புடவையை எடுத்து உடுத்தி எல்லோருக்கும் நமஸ்கரித்து ஆசி பெற்றாள் ராஜி.

அந்திப்பொழுதிலே அடுத்தகத்து மாமி வந்தாள். வீட்டுக்கு அந்த மாமி செல்கையில் வழியனுப்ப வாசல் வரை சென்ற காவேரியம்மாளை, அந்த மாமி, "பிள்ளை உங்களுக்கு என்ன வாங்கிண்டு வந்தான்?" என்றாள்.

"எனக்கு நல்ல ரவிக்கைத் துண்டு ஒன்றரைத் துண்டும், ஜானாவுக்கு நல்ல நூல் புடவையும் வாங்கிண்டு வந்திருக்கான்! ராஜி உடுத்திண்டிருக்கிறதும் புதுசுதான்! அது ஒன்பது கஜமாயிருக்கிறதைப் பார்த்தால், எனக்கு எடுத்திருந்தானோ என்னமோ, அதுவும் சரியாய்த் தெரியாதெனக்கு! ஆனா, புடவை நாசூக்காயிருக்கு. அவளுக்காகவே வாங்கியிருந்திருக்கலாம், சொல்ல முடியாது! அவன் ஒரு வருஷம் நிறைய சம்பாதித்ததுக்கு, அங்கே தனிக் குடித்தனம் இருந்ததுக்கு, அவளுக்கு வேறே ஒன்றும் அவன் வாங்கினதாகத் தெரியலை! இதானா கணிசமா அவன் வாங்கினது என்று இருக்கு அவளுக்கு!..... என் பிள்ளையும் நாட்டுப் பெண்ணும் தப்பா நடந்து கொள்கிறவா இல்லை! அப்படிப் பிசகி விட்டாலும், அது பாராட்டும்படியாகயிருக்காது!" என்று பதில் கொடுத்தாள் காவேரியம்மாள்.

மூச்சைப் பிடித்துக்கொண்டு மாமியாரின் பதிலையே கவனித்து வந்த ராஜி ஒரு பெருமூச்சுவிட்டாள் ஆறுதலுடன்.

'நீங்கள் தெய்வாம்சம் அல்ல அம்மா! தெய்வம்!' என்று எண்ணியவாறே கண்களை லேசாக மூடிக்கொண்டாள்.

மனக்கல்மிஷம் இல்லாமலே இருப்பது தெய்வாம்சம்! கல்மிஷம் ஏற்பட்டாலும், துடைத்தெறிந்துவிட்டு, நல்லதையே நினைத்து இன்பம் பரவச் செய்வது தெய்வீகமேயல்லவா?

'மாமியாருக்கேற்ற மருமகள் தானம்மா நீ!' என்று சொல்லி, அவள் கண்களைத் துடைக்க விரும்புவது போல, ராஜியின் கையிலிருந்த ஊதுவத்தியினின்று கிளம்பிய புகை, அவள் முகத்தினூடே சென்றது. ஒரு சிறு யோசனையும், பகுத்தறிவும் குடும்பத்தில் மணம் பரவச் செய்யும் என்பதை அந்த ஊதுவத்தி நிரூபிக்கிறது என்று நினைத்துக்கொண்டாள் ராஜி, கண்களைத் திறந்தவுடன். அவள் மனதில் நிலவிய அமைதியின் எதிரொலி!

**********

(சுதேசமித்திரன், பிப்ரவரி 15, 1948)